
# காலர்லெஸ் ஷர்ட்

*இதை எப்படி தைக்கறதுன்னு தெரிஞ்சுக்க நீங்க ஆர்வமா இருந்தா படிப்படியா கற்றுத்தர்ற இந்த டுடோரியல் உங்களுக்கு உதவும்.*


















**தேவைப்படும் பொருள்கள்**

2.5 "அகலம் கொண்ட 2.5 மீட்டர் அச்சிடப்பட்ட துணி
காலர்லெஸ் ஷர்ட் டெம்ப்ளேட்டை நீங்க எங்க www.ushasew.com வெப்சைடிலிருந்து டவுன்லோட் செய்துக்கலாம்
சாக்
மணிகோர்த்த ஊசிகள்
கத்தரிக்கோல்
ஸ்கேல்
மெஷரிங் டேப்
¼ மீட்டர் கேன்வாஸ் இணைவு
உஷா ஜனோம் பட்டன் துளை கால்
பொருத்தமான நூல்
12 பொத்தான்கள்

இந்த வீடியோவில, ஒரு சட்டைக்குத் தேவையான பல்வேறு பீசஸ டெம்ப்ளேட்டிலிருந்து எப்படி வெட்றது, ஷர்டின் முன்பக்க பீஸ தயாரிக்கறது, முன், பின் பக்க பீசஸ எப்படி ஜாயின்ட் பண்றது அப்புறம் நெக்லைன் முடிக்கறது, கஃப்சோட ஸ்லீவ் பிரிப்பேர் பண்றது அதை ஷர்ட்ல அட்டாச் பண்றதுன்னு எல்லாத்தையும் கத்துப்போம். சைட் சீம்ஸ் ஃபினிஷி பண்ணி பாட்டம் ஹெம் பண்ணி கைடசில பட்டன்ஸ் அட்டாச் பண்றைதயும் கத்துக்குவோம்.

**ஸ்டெப் 1 டெம்ப்ளேட் மார்க்கிங், கட்டிங்**


உங்களுக்கு பிடிச்ச எந்த துணிய வேணாலும் எடுத்துக்கங்க, ரைட் சைட் மேல இருக்க மாதிரி முழுசா விரிச்சு நீள வாக்குல டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி மடியுங்க. www.ushasew.comலேந்து டவுன்லோட் செய்த ஷர்ட்டோட பின் டெம்ப்ளேட்ட துணில வையுங்க. 'ஆன் ஃபோல்ட்'னு வைச்சிக்கங்கசைட்-அ துணி மடிப்பு மேல வைக்கணுங்கறைத நினைவுல வெச்சிக்கங்க. மணி கோர்த்த பின்ஸால அதன் இடத்தில வெச்சு பின் பண்ணுங்க, பின்ஸ் துணியின் ரெண்டு லேயர்குள்ளயும் நுழையறைத உறுதி செய்துக்கங்க. அப்றம் சாக்கால துணி மேல டெம்ப்ளேட்ட முழுசா ட்ரேஸ் பண்ணுங்க. டெம்ப்ளேட்டிலிருந்து பின்ஸ நீக்கிட்டு அதைத் தனியா வையுங்க. ட்ரேஸ் செய்த பேட்டைன கத்தரிக்கோலால கட் பண்ணி எடுங்க. மெதுவா சீரா கட் பண்ணுங்க, பேட்டன் அப்படியே இருக்கான்னு உறுதி செய்துக்கங்க. வளைவுகள்ல கவனமா இருங்க. கட் பண்ணின பீசஸ தனியா வையுங்க.

மீதி இருக்கற துணிய வெச்சு ஸ்லீவ் தயாரிக்கலாம். டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி பாதியா மடிச்சு துணி மேல ஸ்லீவ் டெம்ப்ளேட்ட வையுங்க, டெம்ப்ளேட்ட சரியான இடத்தில பின் பண்ண மணி கோர்த்த பின்ஸ யூஸ் பண்ணுங்க அப்பதான் ட்ரேஸ் பண்றப்ப அசையாம இருக்கும். சாக் எடுத்துகிட்டு துணி மேல டெம்ப்ளேட்ட முழுசா ட்ரேஸ் பண்ணுங்க.
































வளைவான விளிம்புகள்ல மெதுவா, சீரா இதைச் செய்யணும் அதோட ஸ்லிட் மார்க் பண்ணவும் மறக்காதீங்க. இது முடிஞ்சதும் டெம்ப்ளேட்டிலிருந்து பின்ஸ நீக்கிருங்க. பின் குத்தி காயம் பட்டுக்காம இருக்க பின்ஸ அவற்றின் இடத்தில வைக்கறதையும் உறுதி செய்துக்கங்க. அப்றம் மீதி உள்ள துணிய எடுத்துக்கங்க. இதுல காட்டியிருக்க மாதிரி ஃபேசிங் டெம்ப்ளேட்ட அது மேல வையுங்க. இப்ப ட்ரேஸ் செய்த ஸ்லீவ துணியிலிருந்து கட் பண்ணி எடுங்க. ஸ்லிட்-யும் கட் பண்ண மறக்காதீங்க. இதை செய்து முடிச்சதும், மீதி உள்ள துணிய எடுங்க.

இதுல காட்டியிருக்க மாதிரி ஃபேசிங் டெம்ப்ளேட்ட அது மேல வையுங்க, அதுக்கு அப்புறம் ரெண்டு பிளாக்கெட் டெம்ப்ளேட்ட வையுங்க. கஃப் டெம்ப்ளேட் அதுக்கு அப்புறம் வைக்கணும் ஆனா கஃப் டெம்ப்ளேட் 'ஆன்-ஃபோல்ட்'ல மென்ஷன் ஆகியிருக்கறதை கவனியுங்க, அதை துணி மடிப்புல வைக்கணுங்கறதை உறுதி செய்துக்கொங்க இப்ப இந்த எல்லா வெவ்வேறு டெம்ப்ளேட்ஸயும் துணில பின் பண்ணனும். அப்பதான் நாம இவற்றை ட்ரேஸ் பண்றப்ப அசையாம உறுதியா இருக்கும். அடுத்து, சாக் எடுத்துட்டு கஃப் டெம்ப்ளேட்ட துணில ட்ரேஸ் பண்ண ஆரம்பிங்க அப்றம் மெதுவா சீரா பிளாக்கெட்ஸ நோக்கி போங்க. கடைசியா, ஃபேசிங் டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. செய்து முடிச்சதும், நமக்கு ரெண்டு கஃப் வேணும் அதனால, கஃப் டெம்ப்ளேட் பின்ஸ நீக்கி அதை சைட்-ல மறுபடியும் பின் பண்ணுங்க. இதையும் ட்ரேஸ் பண்ணுங்க. எல்லா டெம்ப்ளேட்சிலிருந்தும் பின்ஸ நீக்கிட்டு அவற்றை தனியா வையுங்க. கத்தரிக்கோலால ட்ரேஸ் பண்ணின எல்லா பீசஸயும் கட் பண்ணுங்க.கஃப்ஸ்சிலிருந்து தொடங்கி பிளாக்கெட்ஸ்க்கு போங்க. வளைஞ்ச விளிம்புகள்ல கவனமா இருங்க. கடைசில துணிலேந்து ஃபேசிங்க கட் பண்ணுங்க. எல்லாத்தையும் ஒன்னா வையுங்க. நீங்க கட் பண்ணின எல்லா பீசஸசும் பாக்க இப்படி இருக்கணும். இது முடிஞ்சதும் மீதி உள்ள துணிய எடுங்க. இதுல காட்டியிருக்க மாதிரி இதுக்கு மேல ஃபேசிங் டெம்ப்ளேட்ட வைங்க. தொடர்ந்து ரெண்டு பிளாக்கெட் டெம்ப்ளேட்ஸ வையுங்க. கஃப் டெம்ப்ளேட் அதுக்கு அப்புறம் வைக்கணும் ஆனா கஃப் டெம்ப்ளேட் 'ஆன்-ஃபோல்ட்'ல மென்ஷன் பண்ணி இருக்கறதை கவனியுங்க, அதை துணி மடிப்புல வைக்கணுங்கறதை உறுதி செய்துக்கொங்க இப்ப இந்த எல்லா வெவ்வேறு டெம்ப்ளேட்ஸயும் துணில பின் பண்ணனும். அப்பதான் நாம இவற்றை ட்ரேஸ் பண்றப்ப அசையாம உறுதியா இருக்கும். அடுத்து, சாக் எடுத்துட்டு கஃப் டெம்ப்ளேட்ட துணில ட்ரேஸ் பண்ண ஆரம்பிங்க அப்புறம் மெதுவா சீரா பிளாக்கெட்ஸ நோக்கி போங்க. கடைசியா, ஃபேசிங் டெம்ப்ளேட்ட ட்ரேஸ் பண்ணுங்க. செய்து முடிச்சதும், நமக்கு ரெண்டு கஃப் வேணும் அதனால, கஃப் டெம்ப்ளேட் பின்ஸ நீக்கி அதை சைட்-ல மறுபடியும் பின் பண்ணுங்க. இதையும் ட்ரேஸ் பண்ணுங்க. எல்லா டெம்ப்ளேட்சிலிருந்து பின்ஸ நீக்கிட்டு அவற்றை தனியா வையுங்க. கத்தரிக்கோலால ட்ரேஸ் பண்ணின எல்லா பீசஸயும் கட் பண்ணுங்க.கஃப்ஸ்சிலிருந்து தொடங்கி பிளாக்கெட்ஸ்க்கு போங்க. வளைஞ்ச விளிம்புகள்ல கவனமா இருங்க. கடைசில துணியிலிருந்துஃபேசிங்க கட் பண்ணுங்க. எல்லாத்தையும் ஒன்னா வையுங்க. நீங்க கட் பண்ணின எல்லா பீசஸசும் பாக்க இப்படி இருக்கணும்.

அடுத்து, மீதி உள்ள துணி, முழு-நீளரூலரையும் எடுத்துக்குங்க. ரூலரை 45° கோணத்திலவைச்சிட்டு டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி நேர் கோடு மார்க் பண்ணுங்க. இந்த நேர் கோட்டுலேந்து 1 ¼" டேப்-ல அளந்து, அதை துணில மார்க் பண்ணுங்க. நேர் கோடு வரைய உதவ, தொடர்ந்து சரியான இடைவெளிகள்ல இந்த மார்க்-அ மார்க் பண்ணுங்க. மார்க் பண்ணின பாயின்ட்ஸ ஜாயின் பண்ணுங்க. மார்க் செய்த லைன்ல கட் பண்ணினா பயாஸ் ஸ்ட்ரிப் தயாராகிரும்.






இப்ப கேன்வாஸ் ஃப்யூசிங்க எடுத்து பாதியா மடிங்க அப்பதான் பளபளப்பான பக்கம் ஒன்றை ஒன்று நோக்கி இருக்கும் அதுக்கு மேல கஃப் டெம்ப்ளேட்டை வையுங்க. ரெண்டு பீசஸ் கஃப்ஸ் கட் பண்ண நாம ஃப்யூசிங்க பாதியா மடிச்சிருக்கோம். இதை துணி மேல ட்ரேஸ் பண்ணுங்க. துணிலேந்து ட்ரேஸ் பண்ணின பீசை கவனமா கட் பண்ணி எடுங்க. உங்ககிட்ட இந்த மாதிரி ரெண்டு பீசஸ் இருக்கணும். அருமையான வேலை. இப்ப எல்லா கட்டிங் வேலையும் முடிஞ்சிருச்சு.

**ஸ்டெப் 2 ஷர்ட்டின் ஃபிரன்ட் பீசஸ் உருவாக்குதல்**














அடுத்த ஸ்டெப்புக்கு, ஷர்ட்டோட ரெண்டு முன் பீசஸ் அப்புறம் நாம கட் பண்ணியிருக்கற ஃபேசிங் ஸ்ட்ரிப்ஸ எடுத்துக்கங்க. ஃபேசிங் ஸ்ட்ரிப்ஸ ஷர்ட்டோட ஓபனிங்ல வைச்சு தைக்கணும். இதுக்கு இவற்றை உங்க உஷா ஜானோம் அல்லூர் டி.எல்.எக்ஸ் தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. முன் பீசோட ரைட் பகுதியின் ராங் சைட்-ல ஃபேசிங் ஸ்ட்ரிப்ப வையுங்க. ஃபிரன்ட் பீஸ பிரஸ்ஸர் ஃபூட்டின் எட்ஜ்ல ரைட் சைட் மேல் பக்கம் பாத்துட்டு இருக்க மாதிரி அலைன் பண்ணுங்க. தைக்கறதுக்கு முன்னால, நேர் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயல் ‘ஏ’லயும் தையல் நீளம் 2.5லயும் செட் பண்ணிக்கறதை உறுதி செய்துகிட்டு தைக்க ஆரம்பிங்க. ஷர்ட் முடியற வரை தையுங்க. தையல் பிரியாம இருக்க ரிவர்ஸ் ஸ்டிச் செலக்டார வைச்சிட்டு ஒருசில ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க.



















இது முடிஞ்சதும், முடிக்காத சைட்டிலிருந்து ஃபேசிங் ஸ்ட்ரிப்ப ஓபன் பண்ணி அதை டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி ரைட் சைட்-ல பாதியா மடிங்க. மடிப்பை எடுத்து அதை சீம் லைனுக்கு மேல வையுங்க. இந்த மடிப்பு மேல தைக்கணும். மடிப்பு அளவு 1.5 அங்குலம். மடிச்சிட்டே தையுங்க. தைக்கறப்ப மடிப்பு சரியா சீம் லைன்ல இருக்கான்னு உறுதி செய்துக்கங்க. தைச்சு முடிச்சது பாக்க இப்படி இருக்கணும். நேர்த்தியான ஃபினிஷிங்குக்கு கூடுதலா ஏதாவது மெட்டீரியல், நூல் இருந்தா கட் பண்ணிருங்க. இப்ப ஃபிரன்ட் பீசோட இடது பக்க துணிய எடுங்க. டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி துணியோட ரைட் சைட்-அ ஃபேசிங் ஸ்ட்ரிப்போட மேட்ச் பண்ணுங்க. அதை சரியான எடத்தில வைச்சு தையுங்க. ஆரம்பத்திலயும் முடியற எடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. துணி முடியற இடத்துக்கு வர்ற வரை தொடர்ந்து நேர் தையல் போடுங்க. இது முடிஞ்சதும், ஃபேசிங் ஸ்ட்ரிப்ப திருப்பி ஓபன் பண்ணி, இதுல காட்டியிருக்க மாதிரி க்ரீஸ் பண்ணுங்க. இப்ப துணிய திருப்பி ஃபேசிங் ஸ்ட்ரிப்ப பாதில மடிச்சு அதை க்ரீஸ் பண்ண மடிப்பு மேல மென்மையா பிரஸ் பண்ணுங்க. இதுல காட்டியிருக்க மாதிரி மொத்த ஸ்ட்ரிப்பயும் சீம் லைன் வரை மடிங்க. இப்ப நாம சீம் லை மேல தைக்கணும். விளிம்பை பிரஸ்ஸர் ஃபூட் அடியில அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. துணி முடியற இடம் வரை தையுங்க ஆரம்பத்திலயும் முடியற இடத்திலயும் ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க.





இது முடிஞ்சதும், நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும். ஃபிரன்ட்டோட ரைட் பீஸ் ஃபேசிங் துணியோட ரைட் சைட்லயும் ஷர்ட்டோட இடது பக்க ஃபேசிங் ராங் சைட்-லயும் இருக்கறதை நீங்க பாக்கலாம். முன்னாலிருந்து பின்னாலிருந்து இது பாக்க இப்படித்தான் இருக்கணும்.

## ஸ்டெப் 3 ஷோல்டர்ஸ தைச்சு முன், பின் பக்க பீஸ்களை ஜாயின் செய்தல், நெக்லைன் முடித்தல்










ரெண்டு முன் பக்க பீசஸ் மேல ஷர்ட்டோட பின் பீஸ வைங்க. இப்ப நாம ஷோல்டர்ஸ அட்டாச் பண்ணி பயாஸ் ஸ்ட்ரிப்போட நெக் ஃபினிஷ் பண்ற வேலைய பாக்கலாம்.பீசஸ தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. முதல்ல ஷோல்டர்ஸ் வேலைய முடிக்கலாம், இவற்றை ராங் சைட், ராங் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி அரேன்ஞ் பண்ணி தைக்க ஆரம்பிங்க. செய்து முடிச்சதும், டாப்லேந்து 1/8 அங்குல சீம் அலவன்ஸ கட் பண்ணிருங்க, தையலை கட் பண்ணிராம கவனமா இருங்க. இப்ப ஷர்ட்ட ஓபன் பண்ணி மென்மையா ஸ்டிச் லைனை உங்க விரலால க்ரீஸ் பண்ணுங்க. டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி மடிச்சு அது மேல தைக்கலாம். நாங்க ஒரு ஃபிரென்ஞ்ச் சீம் உருவாக்கறோம். இது முடிஞ்சதும், திருப்பிப்போட்டு ஓபன் பண்ணி மறுபடியும் தையலை மென்மையா க்ரீஸ் பண்ணுங்க. டுடோரியல்ல காட்டி இருக்க மாதிரி தையலுக்கு மேல மறுபடியும் மடிச்சு அதுக்கு மேல தைக்கணும். இது முடிஞ்சதும் துணிய ரைட் சைட் உங்களை நோக்கி இருக்க மாதிரி ஓபன் பண்ணி ஜாயினிங் மேல ஒரு எட்ஜ் தையல் போடுங்க. துணிய பிரஸ்ஸர் ஃபூட்-ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. இன்னொரு ஷோல்டருக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. தேவைப்பட்டா இந்த ஸ்டெப்ப மறுபடியும் பாருங்க.









ஷோல்டர் ஸ்டிச்சிங்க முழுசா முடிஞ்சதும், அடுத்த வேலை நெக். நாம கட் பண்ணின பயாஸ் ஸ்ட்ரிப்ப எடுத்துகிட்டு அதை பாதியா மடிச்சு அதை நெக்லைனோட ரைட் சைட்-ல அலைன் பண்ணனும். ஆரம்பத்தில, மடிப்புக்காக ½ இன்ஞ்ச் விட்டுட்டு ஸ்ட்ரிப்ப கட் பண்ணிரணும். அதிகப்படியா உள்ள ஸ்ட்ரிப்ப உள்பக்கமா மடிங்க. இப்ப பயாஸ் ஸ்ட்ரிப்ப நெக்லைனோட தைக்கணும். ஸ்ட்ரிப்பயும் துணியையும் பிரஸ்ஸர் ஃபூட்-ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க, பயாஸ் ஸ்ட்ரிப்ப தொடர்ந்து அட்ஜஸ்ட் பண்ணிகிட்டே தைக்கணும். முடியற இடத்துக்கு வந்ததும், கூடுதலா உள்ள ½ இன்ஞ்ச் பயாஸ் ஸ்ட்ரிப்ப உள்பக்கமா மடிச்சு அதுக்கு மேல தையுங்க. தையல் பிரியாம இருக்க ரிவர்ஸ் ஸ்டிச் போடுங்க.








Ÿநீங்க தைச்சது கடைசில பாக்க இப்படி இருக்கணும். இங்க டாப்ல கூடுதலா சீம் அலவன்ஸ் இருக்கறதை நீங்க பாக்கலாம், அதை கட் பண்ணிரலாம். தையலை கட் பண்ணாம கவனமா செய்யணும். இது முடிஞ்சதும், டுடோரியல்ல காட்டின மாதிரி ஒரு ரவுன்ட் எட்ஜ் ஸ்டிச் போடுவோம். தைக்க ஆரம்பிங்க இன்னொரு முனை வரை தைக்கணும். தைச்சதுக்கு அப்றம் நேர்த்தியான ஃபினிஷிங் வர கூடுதலா உள்ள நூலை கட் பண்ணிருங்க.





இது இன்னும் முடியல. நாம மறுபடியும் ஸ்ட்ரிப்ப டுடோரியல்ல காட்டின மாதிரி ராங் சைட்-ல மடிச்சு அதுக்கு மேல தைக்கணும். அதை பிரஸ்ஸ ஃபூட் எட்ஜ்ல அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. இன்னொரு முனை வரை சீரா தைச்சிட்டே போகணும் அவ்வளவுதான் முடிஞ்சிருச்சு. நீங்க தைச்சது கடைசில பாக்க இப்படி இருக்கணும். அதிகப்படியா உள்ள நூலை கட் பண்ணிருங்க.

Go back to the cutting board and as you can see, we've stitched the
கட்டிங் போர்டுக்கு திரும்ப வாங்க, நாம ஷோல்டர்சையும் நெக்லைனையும் தைச்சு முடிச்சிட்டதை நீங்க பாக்கலாம். பாக்க ரொம்ப நீட்டா இருக்குல்ல?

**ஸ்டெப் 4 ஸ்லீவ்ஸ் தயாரித்தல்**












அடுத்து நாம பாக்கப்போறது ஸ்லீவ்ஸ். நாம கட் பண்ணின ஸ்லீவ எடுங்க. அவற்றை பாதியா மடிங்க. இதுதான் நம் வலது ஸ்லீவ், இது இடது ஸ்லீவ். முதல்ல இடது ஸ்லீவ பாக்கலாம். ஸ்லீவ ஓபன் பண்ணி டிராயிங் போர்ட்-ல ரைட் சைட் மேல இருக்க மாதிரி வையுங்க. இந்த ஸ்லிட்லதான் நாம பிளாக்கெட் ஸ்ட்ரிப்ஸ அட்டாச் பண்ணுவோம். சின்ன பிளாக்கெட் ஸ்ட்ரிப்ப துணியோட ரைட் சைட்ல தைக்கணும். இதுல காட்டியிருக்க மாதிரி உறுதியா இருக்க சரியான இடத்தில பண்ணுங்க. நீண்ட பிளாக்கெட் ஸ்ட்ரிப்ப துணியோட ராங் சைட்ல தைக்கணும். நீண்ட பிளாக்கெட் ஸ்ட்ரிப்போட எட்ஜஸ ஸ்லீவ்சோட மேட்ச் பண்ணி பின் பண்ணுங்க. வாங்க ஸ்லீவ் பீசோட ஸ்ட்ரிப்ப தைக்கலாம். முதல்ல, சின்ன பிளாக்கெட்ட துணில தைக்கணும். பின்-அ நீக்கிட்டு தைக்க ஆரம்பிங்க. ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. இதை முடிச்சதும், ஸ்ட்ரிப்ப திருப்பிப்போட்டு திறந்து சீம் லைனை மென்மையா க்ரீஸ் பண்ணுங்க. துணிய திருப்பிகிட்டு துணியோட ராங் சைட்ல ஸ்ட்ரிப்ப மடிங்க. மறுபடியும் பாதியா மடிச்சு மடிப்புல க்ரீஸ் பண்ணுங்க. இப்ப மடிப்பை எடுத்து இதுல காட்டியிருக்க மாதிரி ஸ்டிச் லைன்ல வைங்க. இப்ப இந்த மடிப்பு மேல தையுங்க. இது முடிஞ்சதும், இன்னொரு பிளாக்கெட்-அ ஸ்லீவோட அட்டாச் பண்ணிரணும். பின் பண்ணின பகுதிய தையுங்க, அப்ப பின்ஸ நீக்கிட்டே போங்க. நாம இதே பிராசஸ இன்னொரு ஸ்லீவுக்கும் ரிபீட் பண்ணுவோம். நாம ரெண்டு பிளாக்கெட் பீசஸயும் ஸ்லீவோட அட்டாச் பண்ணுவோம்.





நீங்க தைச்சது கடைசில பாக்க இப்படி இருக்கணும். அயர்னை எடுத்து அட்டாச் பண்ணின பிளாக்கெட்ஸ அயர்ன் பண்ணனும். நீண்ட பிளாக்கெட் ஸ்ட்ரிப்ப எடுத்து அதை ஓபன் பண்ணுங்க, தைக்காத பக்கத்துல 1/4th மடிச்சு மடிப்பை தக்கவைக்க அதுக்கு மேல அயர்ன் பண்ணுங்க, அப்புறம் ஸ்ட்ரிப்ப மடிங்க அப்பத்தான் மடிச்ச பீஸ் ஸ்டிச் லைனுக்கு மேல வரும்.





அயர்ன் பண்ணுங்க. இது முடிஞ்சதும், டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி ¼ இன்ஞ்ச்கு பிளாக்கெட்ட மடிச்சு மடிப்பை தக்க வைக்க அதுக்கு மேல அயர்ன் பண்ணுங்க. டாப்பிலிருந்து மறுபடியும் மடிச்சு முக்கோணத்தின் உச்சியிலிருந்து அதை அயர்ன் பண்ணுங்க.











இந்த ஸ்டெப்ஸ் முடிஞ்ச பிறகு, டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி பிளாக்கெட்ல டாகிங் (tacking) தையல் போடுவோம். ஸ்லிட் ஓபனிங் மேல தைக்கக்கூடாது இதே போல அதுக்கு கொஞ்சம் முன்னால தையலை நிறுத்திரணும். இப்ப நாம டாகிங் தையல்கள் மேல தைக்கலாம். விளிம்புகிட்ட வந்ததும், பிவோட் டெக்னிக்க யூஸ் பண்ணி ஒரே ஒற்றை தையலா வர்றதை உறுதி செய்துக்கங்க. இந்த பாக்ஸ முடிக்க ¼"ல ஒரு பார்லல் தையல் போடுங்க. செய்து முடிச்சதும், டாகிங் தையலை கட் பண்ணுங்க. மெயின் தையலை கட் பண்ணிராம கவனமா செய்யணும். நீங்க தைச்சது கடைசில பாக்க இப்படி இருக்கணும்.







இப்ப கஃப் அட்டாச் பண்ற வேலைய பாக்கலாம். கஃப் பீசஸ்ல ஒன்றை அதன் ஃப்யூசிங்கோட எடுத்துக்கொங்க. கஃப் பீச ஓபன் பண்ணி ரிவர்ஸ் சைட்ல ஃப்யூசிங் மெட்டீரியல வைச்சு அயர்ன் பண்ணுங்க. ஃப்யூசிங் மெட்டீரியல் ஒட்டிகிட்ட உடனே, ஃப்யூசிங் சைட் உங்களை நோக்கி இருக்க மாதிரி கஃப்-அ மறுபடியும் மடியுங்க.





டுடோரியல்ல காட்டியிருக்க மாதிரி வெர்ட்டிகல் எட்ஜஸ நாம தைப்போம். கஃப்போட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்ல அலைன் பண்ணி தையுங்க. இது முடிஞ்சதும், அதிகப்படியான சீம் அலவன்ஸ கட் பண்ணிருங்க.





தைக்கப்படாத பக்கத்தில டுடோரியல்ல காட்டப்பட்டதைப்போல ஃப்யூசிங் ஸ்ட்ரிப் மேல ஷட்டோட ஒரு பக்கத்தை மடிச்சு அதுக்கு மேல தையுங்க. கூடுதலா நூல் இருந்தா கட் பண்ணிருங்க.













இப்ப நாம ஒரு பக்கத்தை தைச்சிட்டோம் பாருங்க. மெட்டீரியலை வெளிப்பக்கமா திருப்புங்க அப்பதான் ஃப்யூசிங் உள்ள போகும். கவனமா எட்ஜஸ திருப்பி அதை தனியா வையுங்க. அடுத்து, ஸ்லீவ் மெட்டீரியலை எடுத்து அதை ரைட் சைட் ரைட் சைட்-அ பாத்துட்டு இருக்க மாதிரி பாதியா மடிச்சு திறந்த பக்கங்களை பின் பண்ணுங்க. நாம ஸ்லீவ் அலவன்ஸ் பாதி வரை தைக்கணும். நம்ப பீசஸ தையல் மிஷினுக்கு கொண்டு போங்க. ஸ்லீவோட சைட் சீம்ஸ மேட்ச் பண்ணி அதை பிரஸ்ஸர் ஃபூட் அடில வைச்சு தைக்க ஆரம்பிங்க. ரிவர்ஸ் ஸ்டிச் போட மறக்காதீங்க. கூடுதல் நூலை கட் பண்ணுங்க. ஸ்லீவ திருப்புங்க. அடுத்து ஒரு சுவாரஸ்யமான பகுதி, கஃப் அட்டாச் பண்றது. ரொம்ப கவனம் செலுத்தணும்.








நாம நீள பிளாக்கெட்ட அட்டாச் பண்ணின ஸ்லீவோட எட்ஜ்லேந்து, 1½ அங்குலம் அளந்து, மார்க் பண்ணிக்கொங்க இப்ப நாம கஃப்-அ அளக்கலாம். கஃப் சைட்-ல 9¾” இருக்கு. இப்ப ஸ்லீவ் ஓபனிங்ல 9¾” அளங்க.எட்ஜிலிருந்து நீள பிளாக்கெட்டுல நாம சின்ன பிளாக்கெட்ட அட்டாச் பண்ணியிருக்கோம். இங்க குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த பாயின்ட் 9¾”. இப்ப மீதி உள்ள சுமார் 2¼” ப்ளீட்டுக்கு போயிரும். ஆரம்பத்தில மார்க் பண்ணின பாயின்ட்லேந்து 2¼” அளந்து மார்க் பண்ணுங்க. முதல் மார்க்ல பின் பண்ணி நடு மார்க்ல மடிச்சு பின் பண்ணின துணிய மூணாவது மார்க்ல வையுங்க. இப்ப ப்ளீட்ட சரியான எடத்தில பின் பண்ணலாம். அளவுகள் சரியா இருக்கறதை உறுதி செய்துகிட்டு, மறுபடியும் ஸ்லீவ் நீளத்தை அளங்க. அது 9¾” இருக்கணும். இப்ப இதுல காட்டியிருக்க மாதிரி ப்ளீட்ல ஒரு சின்ன தையலை போடலாம்.








தைத்த ஸ்லீவை கஃப்குள்ள சொருகி டாப்ல தையுங்க. தைச்சிட்டே போறப்ப ஸ்லீவையும் கஃப்பையும் அட்ஜஸ்ட் பண்ணிட்டே போங்க. இப்ப நாம கஃப்பை சுற்றி தைப்போம். பிரஸ்ஸர் ஃபூட்ல கஃப்போட எட்ஜ அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. உங்க இறுதி தையல் பாக்க இப்படி இருக்கணும். இன்னொரு ஸ்லீவுக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. நாம பிளாக்கெட்டையும் கஃப்களையும் ஸ்லீவோட ஸ்மூத்தா அட்டாச் பண்ணிட்டோங்கறதை நீங்க பாக்கலாம், ப்ளீட்ஸ்கூட வெளிய நீட்டிட்டு இல்லாம ஒரு பக்கமா அடங்கியிருக்கு.




## ஸ்டெப் 5 ஸ்லீவ் அட்டாச் செய்தல் சைட் சீம்ஸ் ஃபினிஷிங் மற்றும் பாட்டம் ஹெம்

இப்ப நாம ஸ்லீவ்ஸ அட்டாச் பண்ணினதை நீங்க பாக்கலாம். இதுல காட்டியுள்ளபடி சட்டையை ஓபன் பண்ணுங்க. ஸ்லீவை எடுத்து அதை பாதியா மடிங்க. கத்தரிக்கோலை யூஸ் பண்ணி பாதில ஒரு நோட்ச் கிரியேட் பண்ணுங்க. இந்த நோட்ச ஷர்ட்டின் மத்தில ஷோல்டர்ஸ்ல மேட்ச் பண்ணி பின் பண்ணுங்க. ரைட் சைட், ரைட் சைட்-அ நோக்கி இருக்கறதை உறுதி செய்துக்கொங்கதைக்க சுலபமா இருக்க ஸ்லீவ் முழுவதும் பின்ஸ் குத்துங்க. இன்னொரு பக்கத்துக்கும் இதே பிராசஸ ரிபீட் பண்ணுங்க. சட்டைய ஓபன் பண்ணி ஸ்லீவ்ல நடுப்பகுதிய மார்க் பண்ணுங்க. ஸ்லீவோட ஆர்ம் ஹோல் பகுதியையும் ஷர்ட் பீசையும் ஒன்னா சேர்த்து பின் பண்ணுங்க. ஆர்ம்ஹோல் வேலை முடிஞ்சதும் சைட்ஸ மேட்ச் பண்ணிட்டு ஷர்ட்டோட சைட் சீம்ஸ தைக்கலாம்.

பின் பண்ணின ஷர்ட் பீசஸ உங்க உஷா ஜானோம் அல்லூர் டி.எல்.எக்ஸ் மிஷினுக்கு கொண்டு வாங்க. ஸ்லீவோட எட்ஜ பிரஸ்ஸர் ஃபூட்டோட அலைன் பண்ணி தைக்க ஆரம்பிங்க. அடுத்த பக்கத்துக்கு போயிட்டே பின்ஸ நீக்கிட்டே வருவோம். இப்ப ஷட்டுல ஸ்லீவ வைச்சு தைச்சிட்டோம்னு நீங்க பாக்கலாம். நாம இதே பிராசஸ இன்னொரு பக்கத்துக்கும் ரிபீட் பண்ணுவோம். இது முடிஞ்சதும், சைட் சீம்ஸ தைக்கத் தொடங்குவோம். ஸ்லீவ்ஸ ஒன்றா மேட்ச் பண்ணி ஸ்லீவோட நடுப்புள்ளியிலிருந்து தைக்க ஆரம்பிச்சி ஹெம்-அ நோக்கி போகணும். துணிய அட்ஜஸ்பண்ணிகிட்டே போகணும். அடுத்த பக்கத்துக்கும் இதையே செய்யுங்க. நாம சைட் சீம்ஸ தைச்சு முடிச்சாச்சு பாருங்க. ஆனா இன்னமும் வேலைமுடியல. மறுபடியும் சைட் சீம்ஸ நாம தைப்போம் ஆனா இந்த தடவை ஜிக் ஜாக் தையல் போடுவோம். பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கும் தையல் நீளத்தை 1.5க்கு செட் பண்ணிகிட்டு தைக்க ஆரம்பிக்கலாம். இந்த தையல் ஷர்ட்டுக்கு நேர்த்தியான ஃபினிஷிங் கொடுத்து விளிம்புல நூல் தொங்கறதை தவிக்க உதவும். பாருங்க இது பாக்க எவ்வளவு கிளீனா இருக்கு? அடுத்து நாம செய்ய வேண்டியது ஷர்ட்டோட பாட்டம் ஹெம்மிங். இதுக்கு ஷர்ட்டோட பாட்டம ரெண்டு தடவை ¼ இன்ஞ்ச் மடிங்க. இந்த மடிப்புல நாம தைப்போம். நேர் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை 'ஏ'க்கும் தையல் நீளத்தை 2.5க்கு ரீசெட் பண்ண மறக்காதீங்க. தைக்க தொடங்குங்க, மடிச்சிட்டே தையுங்க. முழுசா தைக்கணும். சீம் லைன்ஸ தைக்கறப்ப கூடுதல் கவனம் செலுத்தணும். நீங்க தைச்சது பாக்க இப்படி இருக்கணும்.

இதுவரை நாம செய்து முடிச்சது, ஷர்ட்ல ஸ்லீவ்ஸ் அட்டாச் பண்ணியாச்சு, சைட் சீம்ஸ தைச்சாச்சு, பாட்டம்ல ஹெம் பண்ணியாச்சு.




















## ஸ்டெப் 6 பட்டன்ஸ் அட்டாச் செய்தல்

கிட்டத்தட்ட ஷர்ட் தைச்சு முடிச்சிட்டோம், ஃபினிஷிங் டச்சஸ்தான் பாக்கி. சட்டையை புரட்டி திருப்புங்க. இடது பக்கம் பட்டன் துளைகளை கிரியேட் பண்ணிட்டு பட்டன்ஸ வலது பக்கம் அட்டச் பண்ணலாம். முதல் பட்டன நெக் ஃபேசிங் அடியில நெக்லேந்து ஒரு 1 இன்ஞ்ச் தள்ளி வைச்சு மார்க் பண்ணுங்க.




















பட்டன் ஸ்ட்ரிப் நடுவுல வைக்கிறதை உறுதி செய்துக்கங்க. அங்கிருந்து3½ இன்ஞ்ச் அளந்து ரெண்டாவது மார்க் உருவாக்குங்க. கடைசி வரை இதை தொடர்ந்து செய்யுங்க. அந்த சைட்-லயும் பட்டன்ஹோல்ஸ்க்கும் மார்க்ஸ் உருவாக்குங்க. நெக்கிலிருந்து1 இன்ஞ்ச் தள்ளி முதல் மார்க் அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து 3½ இன்ஞ்ச்க்கும் மார்க் பண்ணுங்க.

ஸ்லீவ்ஸ்க்கு கஃப்-போட நடுப்பகுதிய எடுக்கணும். கஃப் அளவு 2½" அதனால நடுப்பகுதி 1¼"ஆ இருக்கும். இந்த பாயின்ட்ட மார்க் பண்ணுங்க. கஃப்-போட ஓபன் எட்ஜ்சிலிருந்து உள் பக்கம்1 இன்ஞ்ச் மார்க் பண்ணுங்க. இந்த மார்கிங்தான் முதல் பட்டனோட பொசிஷன். ரெண்டாவது பட்டன். கஃப் ஓபனிங்கிலிருந்து தோராயமா ¼"ல வைக்கப்படும். இந்த பாயின்ட்டயும் மார்க் பண்ணிக்கங்க. பட்டன்ஸ் பாக்க இப்படித்தான் இருக்கும்.

கஃப்ல பட்டன்ஹோல்க்கு கஃப்போட சென்டர் பாயின்ட மார்க் பண்ணுங்க, கஃப்போட இன்னொரு பக்கத்திலேந்து அது 1¼" இருக்கும். மறுபடியும் கஃப் ஓபனிங்லேந்து 1" அளந்து மார்க் பண்ணிக்கங்க. இதுதான் பட்டன்ஹோல் பொசிஷனா இருக்கும். அடுத்து ரெண்டு பக்கங்களிலிருந்து தைக்கப்பட்ட பிளாக்கெட் சென்டரை எடுத்து பட்டனுக்கும் பட்டன்ஹோலுக்கும் கஃப்லேந்து 2 இன்ஞ்ச்க்கு ஒரு மார்க்கிங் கிரியேட் பண்ணுங்க

இன்னொரு ஸ்லீவுக்கும் இதே புரோசீஜர ரிபீட் பண்ணனும். எல்லா மார்க்கிங்கும் முடிஞ்சதும், உங்க ஷர்ட்ட தையல் மிஷினுக்கு கொண்டு வாங்க. அடுத்த ஸ்டெப்புக்கு, ரெகுலர் பிரஸ்ஸர் ஃபூட்-அ பட்டன் ஹோல் ஃபூட்டா ரீப்ளேஸ் பண்ணுங்க. ஆக்ஸசரி பாக்ஸ நீக்கி, ஃபீட் டாக் பொசிஷனை தாழ்த்த மறக்காதீங்க. ஆக்ஸசரி பாக்ஸ ரீஅட்டாச் பண்ணுங்க, பட்டன் அட்டாச் பண்ண நாம தயார். ஜிக் ஜாக் தையலுக்கு பேட்டன் செலக்டார் டயலை 'சி'க்கும் தையல் நீள டயலை 0 & 1க்கும் இடையில செட் பண்ண மறக்காதீங்க. ஃபூட்ல ஒரு பட்டனை சேர்க்க வேண்டிய ஏரியாவ அலைன் பண்ணிட்டு அப்புறம் நடக்கற மேஜிக்கை பாருங்க. பட்டன் அட்டாச் பண்றது உங்க உஷா அலூர் டி.எல்.எக்ஸ் தையல் மிஷின்ல சுலபமானது, பட்டன்ஹோல்ஸ் கிரியேட் பண்றது அதைவிட ஈசி.

ஆக்ஸசரி பாக்ஸ நீக்கி, ஃபீட் டாக் பொசிஷனை உயர்த்துங்க. பாயின்ட்ட ஃபூட்டுக்கு அடியில அலைன் பண்ணி மிஷினை பட்டன்ஹோல் தையலுக்கு செட் பண்ணுங்க. பட்டன், பட்டன்ஹோலுக்கான விரிவான டுடோரியல் வேணும்னா, எங்க www.ushasew.com.ங்கற வெப்சைட்ல டுடோரியல் ஆன் பட்டன் ஹோல் ஃபிக்சிங்-அ வாட்ச் பண்ணுங்க.

ஹோல் தைச்ச பிறகு ஹோல் கிரியேட் பண்ண ஒரு சீன் ரிப்பரை யூஸ் பண்ணுங்க. அவ்வளவுதான். எல்லா பட்டன்ஸ்க்கும் இதே ஸ்டெப்ஸ ரிபீட் பண்ணுங்க.

ஆஹா, நம்ப சட்டை ரெடி. ஷர்ட்ட தைச்சு, பட்டன்ஸ் அட்டாச் பண்ணி, பட்டன்லேஹால்சும் கிரியேட் பண்ணிட்டோம். இது எல்லாம் செய்ய தனித்தனி மிஷின்ஸ் வேற வேற புரொஃபனல்கள் தேவைப்படற காலம்லாம் மலையேறிப்போச்சு. நம்ப சட்டை ரொம்ப சூப்பரா இருக்குல்ல?